சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

பு.சா.01 திரு. ஆறுமுகம் த /பெ திரு. ராஜா , வயது 57

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை .–**

. 1. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். அரசு ஒப்பந்ததாரராக பணியாற்றி வருகிறேன். எனக்கும் எதிரிக்கும் சுமார் 15 ஆண்டுகளாக பழக்கம் உண்டு. இந்த வழக்கு பரிவர்த்தனை தவிர எனக்கும் எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் உள்ளதா என்றால் இல்லை. நான் வருமான வரி செலுத்துகிறேன். நான் பைனாஸ் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. நான் சுமார் 18 ஆண்டுகளாக வருமான வரி கணக்குகள் தாக்கல் செய்து வருகிறேன். நான் ஒப்பந்ததாரராக பணியாற்றும் நிலையில் தனிப்பட்ட முறையில் செய்கிறேனா அல்லது ஏதேனும் நிறுவனத்தின் பெயரில் செய்கிறேனா என்றால் தனிப்பட்ட முறையில் எனது பெயரில் செய்து வருகிறேன். நான் காண்ட்ராக்டர் தொழில் என் மனைவி பெயரில்தான் செய்து வருகிறேன். என் மனைவி பெயரில் தொழில் செய்தாலும் அதற்கான வேலைகளை நான் தான் செய்து வருகிறேன். என் பெயரில் ஒப்பந்ததாரராக நான் பணியாற்றவில்லை என்றால் சரிதான். 05.03.2021 தேதியில் எதிரிக்கு நான் ரூபாய் 30 லட்சம் கடனாக கொடுத்துள்ளதாக நான் தெரிவித்துள்ள நிலையில் அந்த விவரத்தை வருமான வரி கணக்கில் நான் காண்பித்து உள்ளேனா என்றால் மூன்று மாதத்திற்குள் எதிரி திருப்பி தருவதாக கூறியதால் நான் எனது வருமான வரி கணக்கில் அதை காண்பிக்கவில்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலையில் குறிப்பிட்டுள்ள பெயர், பணம் மற்றும் கையொப்பம் யாரால் பூர்த்தி செய்யப்பட்டது என்றால் எதிரியால் பூர்த்தி செய்யப்பட்டு எனக்கு கொடுக்கப்பட்டது.

2. நான் கூறுவது போல் காசோலையை எதிரி பூர்த்தி செய்து கொடுத்ததாக நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. அவை எதிரியால் நிரப்பப்படவில்லை என்றாலும் காசோலை எழுதப்பட்ட வாசகங்கள் எதிரி உடைய கையெழுத்து இல்லை என்றாலும் சரியல்ல. அந்த காசோலையை எதிரி பூர்த்தி செய்து கொடுக்கவில்லை என்பதை நிரூபணம் செய்ய ஆய்விற்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் எதிரியின்

பணியாள் கூட அதை பூர்த்தி செய்து கொடுத்திருக்கலாம் அந்த விவரம் எனக்கு தெரியாது. 05.03.2021 எதிரி என்னிடம் பணத்தைப் பெற்று 5 மாதங்கள் கழித்து 03.08.2021 அன்று தான் இந்த வழக்கு காசோலை என்னிடம் கொடுத்ததாக புகாரில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் எதிரிக்கு பணம் கொடுத்த தேதியில் அவர் எனக்கு காசோலை எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பணம் கொடுத்த தேதியில் எதிரியிடமிருந்து ப்ரோநோட் ஏதேனும் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. 03.08.2021 அன்று எதிரி நிரப்பப்பட்ட காசலையை என்னிடம் கொடுத்ததாக நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. 05.03.2021 கடனை பெற்று 03.08.2021 அன்று காசோலை கொடுத்ததாக நான் தாக்கல் செய்த வழக்கு ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. எதிரி நந்தனம் பொறியியல் கல்லூரியில் நிர்வாகியாக உள்ளார் என்றால் சரிதான். அந்த பொறியியல் கல்லூரியில் எத்தனை நபர்கள் அறங்காவலர்களாக உள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

03. எதிரி பணியாற்றும் கல்லூரி தனி நபருக்கு சொந்தமானதா அல்லது ஒரு அறக்கட்டளைக்கு சொந்தமானதா என்று தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு பரிவர்த்தனை தவிர எனக்கும் எதிரிக்கும் அவர் பணியாற்றி வரும் நந்தனம் பொறியியல் கல்லூரி சார்பாக பல நிரப்பப்படாத காசோலைகளை என்னிடம் எதிரி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கு நான் கொடுத்த பணத்திற்கு வட்டி பேசப்பட்டதா என்றால் இல்லை. எங்கு வைத்து எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் எதிரி என் வீட்டிற்கு வந்து பணத்தை பெற்று சென்றார். என் வீடு கரிசநாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ளது. நான் பணத்தை கொடுத்த போது வேறு யாரேனும் உடன் இருந்தார்களா என்றால் திருப்பத்தூர் சேர்ந்த டிவி குமார் என்பவர் வேறு வேலைக்காக அங்கு வந்திருந்தார் அப்போது அவர் முன்னிலையில் எதிரிக்கு பணத்தை கொடுத்தேன்.

04. எதிரிக்கு கொடுத்த பணத்தை நான் வங்கியில் இருந்து எடுத்துக் கொடுத்தேனா அல்லது கையில் வைத்திருந்த பணத்தை கொடுத்து என்னவென்றால் வங்கியில் இருந்தும் எடுத்துக் கொடுத்தேன் நான் ஒப்பந்ததாரராக இருப்பதால் என்னிடம் உள்ள பணத்தையும் சேர்த்து கொடுத்தேன் எவ்வளவு பணம் வங்கியில் இருந்து எடுத்துக் கொடுத்து இருப்பேன் என்றால் சுமார் 10 லட்சம் எடுத்து கொடுத்திருப்பேன் எந்த வங்கியில் இருந்து பணத்தை எடுத்துக் கொடுத்தேன் என்றால் கரூர் வைசியா வங்கி திருப்பத்தூர் கிளையில் இருந்து எடுத்து கொடுத்தேன். அவர் நான் பணத்தை எடுத்த விவரம் எனது வங்கி கணக்கில் வரவு செலவு

வைக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். எனக்கு மொத்தம் மூன்று வங்கிகளில் வங்கி கணக்கு உள்ளது. நான் இந்தியன் வங்கி SBI வங்கி மற்றும் கரூர் வைசியா வங்கியில் வங்கி கணக்கு வைத்துள்ளேன்.

04. கரூர் வைசியா வங்கியில் நான் பராமரித்து வரும் வங்கி கணக்கு மட்டும் நடப்புக்கணக்காகும் மற்ற இரண்டு வங்கிகளிலும் உள்ள வங்கி கணக்கு சேமிப்பு கணக்காகும். நந்தன் பொறியியல் கல்லூரி வங்கி கணக்கில் இருந்து எனது வங்கிக் கணக்கிற்கு பல்வேறு தேதிகளில் பணம் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான் அந்த சமயத்தில் நான் அந்த கல்லூரிக்கு சாலை வேலை மற்றும் கட்டிட வேலை மற்றும் கால்வாய் வேலைகள் செய்ததால் அதற்குண்டான பணத்தை என் வங்கி கணக்குக்கு அனுப்பி வைத்தார்கள். இந்த வழக்கு காசோலை பரிவர்த்தனைக்கு ஏழு எட்டு ஆண்டுகள் முன்பு நான் மேல் கூறிய வேலைகளை பொறியல் கல்லூரியில் செய்தேன். நந்தனம் பொறியியல் கல்லூரிக்கு நான் கட்டிட வேலைகள் பார்த்ததாக புகாரிலோ சட்ட அறிவிப்பிலோ முதல் விசாரணையிலோ நான் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். காசோலையில் கண்ட தொகையை நான் எதிரிக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. காசோலையில் கண்ட தொகையை எதிரி என்னிடம் பெறவில்லை என்றாலும் சரியல்ல. ஏற்கனவே நந்தனம் பொறியியல் கல்லூரியில் நான் கட்டிட வேலை செய்த சமயத்தில் எதிரியிடமிருந்து பெற்ற காசோலையை நான் தற்போது வேண்டுமென்று பூர்த்தி செய்து பொய்யாக இவ்வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு சட்டப்படி செல்லக்கூடிய கடன் ஏதும் திருப்பி கொடுக்க வேண்டியது இல்லை என்றால் சரியல்ல. நான் நந்தனம் பொறியல் கல்லூரியல் கட்டிட வேலை செய்ததற்கு உண்டான பணம் பரிவர்த்தனைகளை Statement of Accounts ஆக தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலாது.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KODHAVADI SUBRAMANIAN DINESH

Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Date: 2026.01.22 10:01:08 +0530

Judicial Magistrate No.1,
Tirupathur.